1989 பிப்ரவரி 17]

(பிற்பகல் 1-10)

பேரவை முன்னுள்ள கேள்வி :

ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :

"1989 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 11 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை (18—2—1989) காலை 9.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்). [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வணிகம்). (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்), [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

5. தமிழ்நாடு அரசின் 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள், [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

6. தமிழ்நாடு அரசின் 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள், [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

3. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான செய்தி குறித்து மாநிலங்களவை கூடுதல் செயலாளரிடமிருந்து வரப் பெற்ற 1—2—1989 ஆம் நாளிட்ட ஆர்.எஸ். 1/67/88-B என்னுள்ள கடிதத்தின் நகல்.

4. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (மக்களவையில் அறிமுகப்படுத்தப் பெற்றவாறு).

5. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்றவாறு).

6. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான மக்களவை நடவடிக்கை குறிப்புகள்.

7. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான மாநிலங்களவை நடவடிக்கை குறிப்புகள்.